| | | | |
|---|---|---|---|
| அசல் வழக்கு எண்.4/2022 | | வா.சா.1 | 15.03.2023 |
| பெயர் | திரு.ராமசாமி | வயது | 46 |
| த/பெ. | திரு.காரைய்ய கவுடர் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | 5/26, கே.புங்கம்பாளையம்,<br>மேட்டுப்பாளையம் | மாவட்டம் | கோயமுத்தூர் |

சாட்சி முன்னிலை, உறுதிமொழி எடுக்கப்பட்டது,

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

4. வழக்குச் சொத்தின் பட்டா யார் பெயரில் உள்ளதென்பது எனக்கு தெரியாது. என் அம்மா உயிருடன் உள்ள காலத்திலோ அல்லது அதற்கு பிறகு நானோ அல்லது என் அம்மாவின் சகோதரிகளோ எங்கள் பெயர் பட்டாவில் வரவேண்டுமென எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். அதனால் எனது அம்மா காலத்திலும் அதைத் தொடர்ந்து என் காலத்திலும் சொத்தில் கூட்டுசுவாதீனத்தில் இருந்து வருவதாக உரைப்பது உண்மைக்கு மாறானது என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தில் பாகம் வேண்டுமென்று காளப்ப கவுடரிமோ அல்லது அவரது அப்பா திருமப்ப கவுடரிடமோ நானோ எனது அம்மாவோ பாகம் கேட்கவில்லையென்றால் நான் அப்பொழுது சின்ன பையன் அதனால் எனக்கு தெரியாது.

5. எனது தாத்தா திருமப்ப கவுடர் 1954 ல் இறந்து விட்டார் என்றால் சரியல்ல. நான் 1957 ல் பிறந்தேன். நான் பிறந்த பிறகு 3 வருடம் கழித்து என் தாத்தா இறந்தார். என் பாட்டி கெம்பக்காள் 1967 ல் இறந்தார் என்றால் சரிதான். அதற்கான இறப்பு சான்றிதழ் இதுதானா என்றால் ஆமாம்,. அந்த இறப்பு சான்றிதழ் பி சா ஆ . 1 என் தாத்தா திருமப்பகவுடர் நான் பிறந்து 3 வருடம் கழித்து இறந்தார் என்பதை நிரூபிக்க அவரது இறப்பு சான்றிதழ் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தாத்தா 1954 ல்தான் இறந்தார் என்று சொன்னால் சரியல்ல. வழக்குச் சொத்துக்கள் அனைத்தும் திருமப்ப கவுடர் சுயமாக சம்பாதித்த சொத்துக்கள் என்றால் என் தாத்தா திருமப்ப கவுடரும் பாட்டியும் சேர்ந்து சம்பாதித்த சொத்துக்கள் ஆகும்.. என் பாட்டி கெம்பக்காளுக்கு தனியாக எவ்வித தொழிலும் இல்லை என்றால் ஆரம்பத்தில் மாடு வைத்து பால் விற்றுக் கொண்டிருந்தார்.

6. என் பாட்டி மாடு வைத்து பால் விற்றுக்கொண்டிருந்ததாக வழக்கிற்காக

உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் என் பாட்டி அவ்வாறு எவ்வித தொழிலும் செய்யவோ வருமானம் எதுவும் ஈட்டி வரவோ இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா சா ஆ 1 பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்திலிருந்து வந்த வருமானத்தை கொண்டுதான் வா சா ஆ 2 சொத்து வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. பாட்டி தனியாக சம்பாதித்து வாங்கினார். பாட்டி தனியாக சம்பாதித்து எத்தனை ரூபாய்க்கு சொத்தை வாங்கினாரென என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். கடந்த 31.05.2006 அன்று சண்முகத்திற்கு நானும் 4 ம் பிரதிவாதி சரஸ்வதியும் , என் பெரியம்மா சுப்பம்மாவும் சேர்ந்து 5 ஏக்கர் 60 செண்ட் சொத்தை விற்பனை செய்தோம் என்றால் சரிதான். அதற்கான விற்பனை பத்திரத்தின் சான்றிட்ட நகல் இதுதானா என்றால் ஆமாம். அந்த பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி சா ஆ. 2.

7. பி சா ஆ 2 ஆவணத்தின்படி நாங்கள் விற்ற சொத்தானது 18.06.1921 அன்று என் பாட்டி கெம்பக்காளின் பெயரில் விலைக்கு பெறப்பட்ட சொத்து என்றால் சரிதான். அதற்கான விலையாவணத்தின் சான்றிட்ட நகல் இதுதானா என்றால் ஆமாம். அந்த பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி சா ஆ. 3. இந்த சொத்தும் திருமப்ப கவுடர் விவசாய நிலத்தில் சம்பாதித்து கெம்பக்காள் பெயரில் வாங்கிய சொத்து என்றால் சரியல்ல. அது என் பாட்டியின் அண்ணன் என் பாட்டிக்கு கொடுத்த சொத்தாகும். பி சா ஆ 2 பத்திரத்தை ஏற்படுத்தும் பொழுது என் பாட்டியின் மகனாகிய என் தாய்மாமனாகிய காளப்ப கவுடரிடமோ அல்லது அவரது பிள்ளைகளிடமோ நாங்கள் கையெழுத்துக்கள் வாங்கவில்லை என்றால் சரிதான். அப்பொழுது அவரிடம் கையெழுத்து கேட்டதற்கு என் பாட்டியின் அண்ணன் கொடுத்த சொத்து என்றும் அதனால் நீயே விற்றுக்கொள் என்று அவர் சொல்லி விட்டார்,

8. காளப்ப கவுடர் மேற்கண்ட சொத்தை அவரது சகோதரிகளுக்கென விட்டு கொடுத்து விட்டாரா என்றால் ஆமாம். அவ்வாறு சொத்துக்களை வாய்மொழியாக எங்களுக்கு காளப்ப கவுடர் விட்டுக்கொடுத்தபோது தாவா சொத்துக்களில் பாகம் கேட்க மாட்டோமென நாங்கள் ஒப்புக்கொண்டோம் என்றால் சரியல்ல. பி சா ஆ 2 பத்திரத்தை ஏற்படுத்தும்பொழுது காளப்ப கவுடரிடம் நாங்கள் எந்த விடுதலை பத்திரமும் எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான். பி சா ஆ 2 பத்திரத்தில் என் பாட்டிக்கு காளப்ப கவுடர் என்ற மகன் இருந்ததாகவே காட்டவில்லை என்றால் சரிதான். பி சா ஆ 2 பத்திரத்தில் என் தாய்மாமா மகனாகிய 2 ம் பிரதிவாதி ராமசாமி இன்னாரென்று நிரூபித்தவர் என கையெழுத்து போட்டுள்ளார் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை.

9. பேச்சுவார்த்தைக்கு மாறாக தாவா சொத்தில் நாங்கள் பாகம் கேட்போமென

தெரிந்திருந்தால் பி சா ஆ 2 பத்திரத்தில் 2ம் பிரதிவாதி ராமசாமி கையெழுத்து போட்டிருக்கமாட்டார் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து காளப்ப கவுடரின் மகன்கள் அவர்களுக்கிடையே தனித்தனியாக பாகம் பிரித்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

1, 2 பிரதிவாதிகள் வழக்குரைஞர் தரப்பில் குறுக்கு விசாரணை நிறுத்திவைக்கப்படுகிறது.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

ஒப்பம்/-பெ.க.சிவக்குமார்

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.